# ஆதி மார்க்க னீதி மொழி

## February 2026

***இதழ் 55 – பிப்ரவரி மாதம் 2026 வெளியீடு***
***© AMNA Trust, Chennai***



## மூலமந்திரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்திர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்களுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்திரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் னோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்திருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே! எதார்த்த நன்மன சற்சன மக்களே ! பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர்பாதத்துடன் அருமையான இப்பொழுதில் இம்மின்னணு சஞ்சிகை 55ஆவது இதழாக மாறாத தெய்வீக மெய் மணத்துடன் உங்கள் கைகளில் மலர்ந்து உள்ளது. இப்படியான இம் மெய்மணம் கமழ்வதற்கு காரணமான நன்மக்கள் அனைவரும் நீடூழி வாழ்க என வாழ்த்துகிறேன். மாறாத மெய்மணமாக நின்று விளங்குகின்ற ஜீவனின் ரகசியத்தை எடுத்துக் கூறும் ஆதி மார்க்க னீதி அவை நிகழ்வுகளின் திருநாட்களே ஒவ்வொரு வாரத்தின் செவ்வாய் வியாழன் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள்.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் மேலான சிறப்பு மார்கழி மாதமும் தை மாதமும் கலந்து வருவதாகும். மார்கழி மாதத்தின் நிறைவு நாளிலே பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்களின் திரு அவதாரம் ஒரு யுகஅவதாரமாக நிகழ்ந்துள்ளது. அவ் அவதாரம் பற்றிய நினைவு கூர்தலும் அந்நிகழ்வின் அறிவுப்பூர்வமான ரகசியங்களும் பொதியப் பெற்று மெய் மணத்துடன் மலர்வதே இம்மின்னணு சஞ்சிகை.

வைகுண்ட ஏகாதசி தினத்தில் பெருமாளை தரிசிக்கும் செயல் இன்று இந்த ஆதி மார்க்க நீதி அவையில் நிஜமாக்கப் பெற்ற ஒன்று என்பதை இம் மின்னணு சஞ்சிகையின் மூலமாக உலக மக்கள் அத்தனை பேருக்கும் அறிவித்துக் கொண்டு இருக்கிறோம். உலக மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்ற இந்த திருச்செயல் பெருமைக்கோ பொருளுக்கோ அல்லாத உயிர்க்களிப்பு வாய்மையாகும். இவ்வாய்மைத் துலக்கத்தை படிக்கக்கூடிய ஒவ்வொரு ஜீவனும் இதனை அறிந்து பயன்பெற வேண்டும் என்பதே இதன் உயர்ந்த நோக்கம்.

சரவண நந்தவன வளாகத்தில் அமைந்துள்ள பரிசுத்த ஆவித் தெய்வத்தின் மெய் ஆலயம் மெய்யைப் பற்றியே பேசி மெய் தவறாதபடி அப்பெருமானின் திருநாமத்தை ஓங்கி உரத்த குரலில் அறிக்கை செய்யவும் மேலும் மேலும் சிறப்பு சேர்க்கும் வண்ணமாக திருமணங்கள் சிறப்பு வைபவங்கள் சுபகாரியங்கள் நிகழ்கின்ற ஓர் இடமாகவும் இருக்கும்.

எமனணுகா சத்திய பரிசுத்தவான்களின் சபையில் எமன் கைவசப்பட்டு பிணநாற்ற தீட்டுக்குரிய நரர் நிலை நிற்பதில்லை என்ற திருவாக்கின் படி எமவாதையை விலக்கிக் காக்கும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆலயமாக அமைந்திருக்கும் ஆதி மார்க்க னீதி அவையின் வைபவ சிறப்பு ரகசியங்கள் யாவும் வருகின்ற காலங்களில் வெளியாக்கப் பெறும்.



Copyright © AMNA Trust, Chennai

பிறவா நெறி அருளி பிறவிப்பிணி தீர்த்து ஜென்ம சாபல்யம் பெறுவதற்கான வழி கூறும் ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகையைக் கேட்டும் பார்த்தும் படித்தும் வருகின்ற நன்மக்கள் அனைவரையும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை



Copyright © AMNA Trust, Chennai	

*ஒரு மதத்திற்குரிய மூல மந்நிரத்தைப் பிரகாச ரூபமாக வெளியாக்குகிறவர்களுக்குப் பெயர் தெய்வம் என்றால், சைவ வைணவ முதலிய எல்லா மதங்ஙளின் மூல மந்நிரங்ஙளையும் அந்நந்ந மதத்தினருக்குப் பிரகாச ரூபத்தில் வெளியாக்குகிறவர்கள் யாராயிருக்க வேண்டும்? ஆகவேதான் எம் செயலையும் எம்மையும் பற்றிப் பேச உனக்குத் திட்டமுட்டு அடிக்கிறது.*

*குழந்நை பிறந்நதும் குவா குவா என்று சத்தம் போடுகிறதே, அந்நச் சப்தம் எங்ஙிருந்நு பிறக்கிறது? அந்ந ஆதிமூல இடத்தை அறிந்நு அடைவதுவே வீடடைதல்.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2026 ஜனவரி மாதம் அவை நிகழ்வுகள் – 2026 பிப்ரவரி மாதம் வெளியீடு

## 02-01-2026 ~ வெள்ளிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தந்நருள வேண்டுமென்ற மைந்நர் தம்மை...** எனும் ஐம்மணிப் பொதிகை பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

சிற்றம்பலப் பொருளாம் ஜீவனை குரு முகமாக அறிந்தோர்க்கு கிரகங்களின் ஆதிக்கம் அற்றுப் போகிறது. அணுவுக்கு அணுவாய், அண்ட பிரம்மாண்டமாய் பிரகாசிக்கின்ற இறை வஸ்துவை அறியவைக்கும் சாவா மூலியாகிய ஆசானின் சங்க நாதமே மரணமிலாப் பெருவாழ்வு அருள்கிறது.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - வாக்கியம் எண் : 9**
**குருபிரான் அருளமுதம்:**

சமரச வேத நாதராம் சாலை ஆண்டவர்கள், 69 சாதிகளடங்கிய பல்லாயிரம் மக்களை தன் தன் மதத்தில் தவறாது இருத்தி சமரச சன்மார்க்கத்தில் வாழ வைத்தார்கள். இம்மெய்ச் செயல் கயிலாயப் பரம்பரையாய் மனுத்தலை உள்ள வரை நிகழ்ந்து கொண்டே இருக்கும் என்பதற்கு வேதமே சாட்சியாகும். ஐம்புல நுகர்வை அறிய வைக்கும் ஆறாவது பொருளாகிய ஜீவனை அறிவதே அறிவு. ஆரும் அறியா அறுத்தடைத்த வாசலுள் நுழைந்து அவரவரின் நாமத்திற்குரிய பொருளுடன் இரண்டறக் கலப்பதே பேரின்பப் பெருவாழ்வாகும்.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:**

சைவ நாற் பாதங்களான சரியை, கிரியை, யோகம், ஞானத்தின் மெய்ச்செயல் அகர வரிசையில் அருளப் பெற்றிருப்பது அறிவு அறி பாடத்தின் சிறப்புகளுள் ஒன்றாகும். கோபுர வாசலாம் வள்ளல் பிரானின் வாயினுள் நுழைந்து ஊனுடம்பு ஆலயம் என்பதை உணர்ந்து, மூன்றாவது கண் கொண்டு சிவமயப் பொருளை தரிசிப்பதே மெய்யறிவு. அறன் பதவிக்கென இறைவன் அருளிய உள்ளுடம்பே செறி உடல், அறிவு உடல் என்கிறது வேதம். தெய்வத் திருமேனி தாங்கி வரும் மெய்க்குரு பிரானின் திரு வாக்கிற்கு இணங்கி ஒழுக்கம், வைராக்கியம், பத்தியத்துடன் மெய்ச் செயலில் பழகித் தேர்ந்து அறிவு வடிவாகியே அழியா மோட்சத்திற்குரிய வித்தாக முடியும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.


Copyright © AMNA Trust, Chennai

## 04-01-2026 ~ ஞாயிற்றுக்கிழமை ~ புத்தாண்டு சிறப்பு அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆதியே அந்நமே அருமையானவருட்கடலே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

சமரச வேத நாதனின் இருப்பிடமே அறுசுவை ஒளியும் இடம். அங்கு சென்று வணங்கும் மெய் வணக்கம் மூலமே உயிரொட்டிய ரகசியத்தை அறிய முடியும்.

நம் அறியாமை இருளை வெட்டி வீழ்த்தும் குருபிரானின் செயலே அசுர சம்ஹாரம், அந்நாளே புத்தாண்டு, தீபவளி, வைகுண்ட ஏகாதசி, லைலத்துல் கதிர்ரா, எட்டாம் நாள் ரா ஞான ஸ்னானம்.

கோவில்களில் சாமி தரிசனம் ஒரு வேடிக்கை என்பது ஒரு மெய் குருபிரானை சந்தித்த பிறகே புரியும். பிறப்பு எனும் பேதமை நீங்கிட குருவின் அருளால் செம்பொருள் காண்பதே பிறவாமை பெறும் வழி.

பகுத்தறிவு எனும் அறியாமை நீக்கி அரை நொடிக்குள் மலமகற்றும் ஆசான் அருளும் தீட்சையால் அறிவதே ஆறாம் அறிவு. அறியாமையே நம்மிடம் கேள்வியாகவும், அதற்கான பதிலாக ஆசான் அருள்வதே அறிவாகவும் உள்ளது.

காணும் பொருள் இன்னதென அறிவிக்கும் திருச்சிற்றம்பலப் பொருளே அவரவரின் நாமத்திற்கான பொருளாக ஜீவனாக குண்டலியாகத் திகழ்கிறது. ஆசான் அருளால் அதை அறிவதே ஞானம். இதனை அறிந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 08-01-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பரிசுகுரு வேமறையின் தரிசனை பண் ணுருவே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

ஒவ்வொரு காலத்திலும் பரிசாக வரும் குருவே பட்டமும் கயிறு போல் பறக்கும் நம் ஜீவனை பார்வையால் பார்த்து படுமுடிச்சிடச் செய்கிறார். ஆசானின் விரி கருணையே மறை வலு னா கொண்டு கடல் முரசாக முழங்குகிறது. சர்வ மதத்தினர்க்கும் பொருந்துவதே மோசே அருளிய 10 கட்டளைகள். சர்வ சித்தி முத்திகள் அளிக்கும் நல்லெண்ணமே நல்வினையாகி வினையறுத்து இறை திருவடியில் சேர்க்கிறது.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - வாக்கியம் 9 (தொடர்ச்சி) :**

சாலை ஆண்டவர்கள் 69 ஜாதி மக்களையும் ஒரே குலமாக ஆக்கி வைத்தார்கள். திருக்குர்ஆன் ஆயத்துகளில் சொல்லப் பெறாத ஒன்றே தொழுகை. அதை ஆசான் அருளால் சரியாக செய்தால்தான் அதற்கான பலன் கிட்டும்.



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் அருளமுதம்:**

குருவருளால் மூன்றாவது கண் திறக்கப் பெற்று வேதவழி நடப்பவரே தன் மதத்துக்குரியவர். ஐந்தொழிலுக்கு அரசே பஞ்சபூத கணங்களைத் தன்னில் அடக்கிய தொந்திக் கணபதி. மூச்சு லயமாகிய மனோ லயத்தால் அடக்கம் மடக்கி பிடிக்கத் தெரிந்தவரே அமரத்துவம் பெற முடியும். மவுத்துக்கு முன் மவுத்தாகிப் பழகும் மெய்த் தொழுகையை அறிவதே புறவணக்கத் தொழுகையின் நற்பலன் ஆகும்.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:**

உயிர்மெய் அறிவான னற்றாளை அறிந்து அதனுள் அடங்கியோரே இறை பொருளான ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் பெறுவர். வாசனை, கேள்வி, இருகண், வாயெவைக்கும் வல்லமை அளிக்கும் அக்கண்ணே நான்முகமான விராட்பிரம்மம். புலன் வழியே மாறாக ஓடும் மனம் ஒண்டி ஒரு மனமாக அமையும் விராட்பதி நிலையே அந்தர்மா முகம் கண்டோங்கும் விராட் தவமாகும். ஆசானின் ஆவிடை எனும் தேவ யோனியில் பிறந்தவரே நால்வகை யோனி எழுவகைத் தோற்றங்களை தன்னிடத்தில் உணர்வர்.

அறிவுக் கண் திறக்கப் பெற்று பஞ்ஞாட்சர மந்திரத்தை தன்னில் அறிந்தவரே தேவர். அணுவில் அணுவாக, அவரவர் நாமமாக வீற்றிருக்கும் மெய்ப்பொருளை அறிவதே தன்னை அறிதல். மனதற்ற பரிசுத்த நிலையே இருவினை போக்கும். நாம் வரம்பிலா மெய்ஞ்ஞானம் அறிவதற்கான ஒரே துணை குருவருளே. அறச் செயலால் அறன்பதவி பெறுவதே இவ்வுடம்பு எடுத்த நற்பலன். ஆறறிவு இன்னதென உணர்ந்து னன்னேர் வழியான ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலமாக அகம் சார்ந்து வாழும் வாழ்வுக்காக அருளப் பெற்றதே அறிவு அறி பாடம்.

பரிசுத்தஆவி தெய்வத்தின் திருவடி போற்றி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 15-01-2026 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## பொங்கல் தின சிறப்பு காணொளிக் காட்சி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்



பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **எந்நை சுக்கிலாம் பரனாட்டில் வாழும் னாளில்...** எனும் அமுத கலைக் ஞான போதம் இரண்டாம் காண்டம் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:*

தந்தையின் ஜீவதேகமாகிய நினைவில் உதித்து தாயின் கருவறையுள் புகுந்து, அறு கோடியே எண்ணாறு லட்சம் கணப்பொழுது அழற்காற்று, நெருக்கம், துருசு அவஸ்தையில் சிக்கித் தவித்த நம்மை மும்மல கணவாய் துயர் கடத்தி இரட்சித்து பிறப்பெடுக்க வைத்த இறை பொருளைத் தரிசிப்பதே அசலான மெய்த் தொழுகையாகும்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல்: வாக்கியம் எண் - 49**

நாம் ஒவ்வொரு கணமும் இறந்து கொண்டே இருக்கிறோம் என்பதை நவக்கிரகக் கோள் மாற்றும் நாத ஜோதிடராகிய குரு பெருமான் அருளால் அறிந்து, அனித்திய தேகத்தில் வசிக்கும் போதே அழியா



Copyright © AMNA Trust, Chennai

புகழுடம்பில் குடியேறி மகிழ்ச்சி பொங்க வாழ்வதே கோளரி சாலையர் திருவிழா எனும் பொங்கலாகும்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:*

திருமூலர் பிரான் அடக்கம் பெற்ற திருத்தலமான சைவ பீடத்தின் முதன்மை ஆலயத்தின், இறைவன் கோமுத்தீஸ்வரர் தாயார் ஒப்பில்லா முலை அம்மை. கலியுகத்தின் முதல் ஆலயமான ஆதி கும்பேஸ்வரர் ஆலயத்தின், தாயார் மங்களாம்பிகை. வைஷ்ணவ க்ஷேத்திரம் திருநாகேஸ்வரம் ஆலயத்தின் இறைவன் உப்பிலி அப்பன் தாயார் பூமாதேவி. இங்கு ராகு ஸ்தலத்தில் நாகவல்லி மற்றும் நாகக்கன்னி தேவியருடன் அருள்பாலிப்பது மங்கள ராகு பகவான். இத் திருத்தலங்களின் ரகசியமும் அங்கு பெறும் மெய் அனுபவமும் ஒரு மெய் குருபிரானுடன் சென்று தரிசிக்கும் போதே கிட்டும்.

**குருபிரான் அருளமுதம்:**

செவிச் செல்வமே எல்லா செல்வத்திற்கும் தலையானது. செல்வ முச்சீரும் பொங்கி, மகா ஜன மக்களாக, ஜென்ம சாபல்யம் பெறக்கூடிய மக்களாக ஆதி மார்க்க னீதி அவையில் ஆகிக் கொண்ட மக்கள் வாழ்கிறார்கள், வாழ இருக்கிறார்கள், வாழ்வார்கள் என குருபிரான் அருளியதும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 17-01-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **மாசிலான் மறைப்படியும் எண்ணில் கோடி மந்நிரங்ஙள் அனைத்தும்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

நாத தொனியை உள்வாங்கும் இரகசியப் பொருளே ஜீவன். அதனை அறிந்த மக்களுக்கு புது நிலவு தினம் மிகச் சிறந்த நாளாகும். அறியாமை விலக்கி அறிவை அறியச் செய்வோரே பெரியோர். ஆறாம் அறிவின் பயன் அசல் இறைவனை அறிந்து பிறவா நெறி பெறவே. அறிவுக்கண் கொண்டு காண்பதே காணும் பொங்கல் என அறிந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

*ஜீவ சகோதரர் கௌதம்:*

பாதம் அறிந்தவரே வேதம் அறிவர். குருவின் அருளமுதமே கோடாயுதமான அட்சய பாத்திரம். ஜீவனைக் காண்பதே உயிரொட்டிய ரகசியம். அமானிதம் எனும் வித்யா பாதம் கொண்டு அடைவதே சாயுச்ய பதம்.

**கோடாயிதக் கூர் வாக்கியம் - 228**

உபதேசம் என்பது ஆசானை அறியவும், வாக்மி ஆகவும், வேதம் விளங்கும் செயலுக்குமே என வேத சாட்சியாக அறிந்து எமன் எல்லையில் வெற்றி பெறச் செய்யும் ஒருவரை தேடி அடைய வேண்டும்.

*ஜீவ சகோதரர் விஜயகுமார்:*

அசலின் நகல் வடிவான கோவில்களின் தத்துவ ரகசியத்தை மெய் ஆசான் ஒருவரின் இரக்கத்தால் தான் அறிய முடியும். அவரே ஆறாம் அறிவின் பயன் இன்னதென உணர்த்த வல்லவர். இதனை நிரூபிக்கும் செயல் உள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது.


Copyright © AMNA Trust, Chennai

## 22-01-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **என்னமோ வென்று வும்மை யெண்ணிவிட் டிருந்நே னின்னாள்...** எனும் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
உடலின் உள்ளிருந்து அனுபவிக்கும் கர்த்தா எனும் கடவுளை அறியாததே அறியாமையின் உச்சம். ஆசான் அருளால் அறிவுக் கண் திறக்கப் பெற்று, அகத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலப் பொருளறிந்து அகத்திலுள்ள ஆவிப் பொருளான நான்கு தேகத்திலும் குடி ஏறி வாழ்வதே பிரம்மவித்தை.

மெய்யறிவு பெற்று அவரவர் நாமத்திற்குரிய இறை பொருளை அறியும் போதே வள்ளுவர் அருளிய  நான்கு படிநிலைகளும், வள்ளல் பெருமான் அருளிய புருஷார்த்தம் நான்கும் இன்னதென உணர முடியும்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல்: வாக்கியம்: 9 (தொடர்ச்சி)**
**குருபிரான் அருளமுதம்:**
னித்திய வாழ்வுக்கான தன்னையறியும் தவமுறையில் தலையிட்டு திருவெனும் அட்சரமாக, திருவடியாக நம்மைத் தாங்குகின்ற இறை பொருளை அறிந்து அடைவதே மந்திரப் பலனாகும்.

**ஞானனூற் பொருளறிதல் - குருபிரான் அருளமுதம்:**
ஞானனூல்  பொருள் அறியாதவன் பாமரன். பொருளறிந்து பழகித் தேர்ந்தவன் பண்டிதன். ஆசான் தன் ஒரெழுத்து மாத்திரைக் கோலான பூட்டடங்கா சாவி கொண்டு அருளும் சிவ போகத்தின் மூலமே எல்லையில்லா வானமும் ஞானமும் நம் கைவசம் ஆகும். ஜீவன் எனும் பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. குருவின் அருளால் நாளும் கோளும் ராசி நிலைகளும் மற்றும் காற்றைப் பிடிக்கும் கணக்கும் அறிந்து அடக்கத்தை மடக்கிப் பிடிக்கத் தெரிந்தோரே யுகங்கள் நான்கும் கைகொள்ள முடியும்.

கலிமாப் பொருள் அறிந்த காமீலிடம் சரண் புகுந்து அறுசுவை கொண்டு ஒளியும் இடம் அறிந்தவரே அமரர். அறிவு இருக்கும் தலமாகிய சித்தம் எனும் ஜீவனை அறிந்து மனதை துறந்தவனே துறவி. முப்பொருள் கோல ரகசியத்தை மெய்ப்பால் எனும் குருமொழியால் அறிந்து பெறுவதே மெய் அனுபவம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 24-01-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அளவிலா வெகுகாலம்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:* மாதா பிதா குரு தெய்வம் அனைத்தும் ஒன்றாகத் திகழும் மெய் குருபிரானே நம் இருதயத்தில் விளங்கும் இறைவனைக் காட்ட வல்லவர். நம் பொறிகள் ஓடா நிஜமான இடத்தை அறிய வைக்கும் விதி கடந்தவரே ஜெகதகுரு. இருவினை அறுத்து பிறவாமை எனும் எல்லையை அடைவதே மனுவின் தலையாய கடமை என உணர்த்தி அதனை செயலாக்கும் இடமே ஆதி மார்க்க நீதி அவை.



Copyright © AMNA Trust, Chennai    

**கோடாயிதக்கூர் வாக்கியம் - 228 :**
உபதேசப் பொருளை விளக்கியவர் மேல் அன்பு வைப்பவனே சிவ யோகியாக வல்லவன். முத்திக்கு மூலமான ஆசானின் இரக்கம் நம்மேல் பாயும் படி நாம் நடக்க வேண்டும். ஆசானின் சொல்லே வேதத்தின் தீபமாகும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:*
உலகக் காரியத்தில் தெளிவும் இறை காரியத்தில் குழப்பமுமாக வாழும் நரனை இறை சன்னதமுடன் வரும் தன்னை அறிந்த பெரியோரே மனுவாக மாற்றி தேவன் ஆக்குகிறார். அசலான மெய் வணக்கத்தை அருளும் குருவின் சொல்லக விளக்கே வேத சாட்சியாக இறைவனை காணச் செய்கிறது.

*ஜீவசகோதரர் கோபிநாத்:*
செல்போன் பற்றிய விழிப்புணர்வு: நம்மை அறியாமல் நம் ரகசியங்கள் மற்றும் வங்கி விபரங்கள் போனில் உள்ள செயலிகள் மூலமாக திருடப் பெறுகிறது என அறிந்து மிகுந்த கவனமுடன் அதனைக் கையாள வேண்டும்.

**வேதாகமம் - சுவிசேஷ நற்செய்தி: திருவாக்கியம் எண்: 5,8,9,14 :**
*ஜீவசகோதரர் விஜயகுமார்:*

ஆவிக்குரிய நான்கு நியாயப் பிரமாணம்:
1) **பிரத்தியட்சம்:** நேரிடையாக அனுபவத்தில் அறிவது.
2) **அனுமானம்:** காரணம் கொண்டு யூகித்து அறிதல்.
3) **உவமானம்:** ஒப்பீடு உதாரணம் கொண்டு அறிதல்.
4) **சத்தம்:** நம்பகமான பெரியோரின் வாக்கு.

இதனை மெய்வழி சாலை ஆண்டவர்கள் எழுதாத எழுத்தின் மூலமாக வித்தில்லா வித்து மற்றும் வித்தின் ரகசியமாக விளக்கி அருளியுள்ளார்கள். பரலோக வாழ்விற்கான எண்ணற்ற ஐயத்திற்கும் கேள்விக்கும் வேத சாட்சியாக தன்னுள் அறிய வைத்து செல்லும் நாள் சென்றிடாது காக்கும் செயலுள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் சங்கர்:*
கடமாகிய இக்கடத்துள் ஆதி அனாதியாக விளங்கும் அழியா மெய்ப் பொருளை அறிந்து அதனுடன் இரண்டறக் கலப்பதே சாயுச்ய பதமாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 25-01-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஶ்ரீ. தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **துலங்ங இங்ஙு எவர்க்குமெட்டா னிலைகளெல்லாம்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
சன்யாசம் பெற்று தேகம் நானல்ல என்றறிந்து பற்றற்ற இறைநிலை அடைந்தவனே சன்யாசி. குருவை அறிந்தால் நான்கு முகம் எழுவகை அமானிதத்துடன் இயங்குவதை தன்னில் அறியலாம். அமானிதமே நான்கு தேக ரகசியமாக காமமுடிப் பீடமாக உள்ளது. ஜீவனே கதிர் காமமாக உள்ளது.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரி லாவண்யா:*


குரு முகமாய்த் தன்னை அறியும் செயல் பழகி பற்றற்ற பரம்பொருளை பற்றுவதே சன்யாசம். நாளது ஒன்று போல் காட்டும் குருவே ராஜ சன்னியாசி.

*ஜீவசகோதரர் பழனிசெல்வராஜ்:*

குருமுகமாக நம் வினை தீர்வதே பிறவாமை. வேத வார்த்தைகள் செயல் பெறும் இடமே ஆதி மார்க்க னீதி அவை. பிறரின் உணர்வுக்கு மதிப்பளித்து வாழ்வதே பக்குவமாகும்.

**குருபிரான் அருளமுதம்:**

அவரவரின் நினைவே பக்குவத்தின் இருப்பிடம். அறிவில் பக்குவம் பெற்றவர்க்கே ஜீவனின் பக்குவம் தெரியும். சரியையில் பக்குவம் அடைந்தவர்ககே கிரியை, யோகம், ஞானம் கைகூடும்.



*ஜீவசகோதரி ரேவதிகார்த்திகேயன்:*

முழு ஈடுபாடும் ஆர்வ சித்தமும் திடமான வைராக்கியமும் ஞானத்தின் அடிப்படை ஆகும். குரு அருளும் ஞானமே அசைவமான மனதை சைவமாக்கி, 96 தத்துவ ரகசியம் அறியச் செய்கிறது.

*ஜீவசகோதரி பிரேமஸ்ரீ வடிவேலன்:*

வாழ்வின் நிலை காட்டும் காலக் கண்ணாடியே முப்பால் கொண்ட திருக்கொரல். இதன் பெருமையை உணர்த்த வள்ளுவர் அருளியதே திருவள்ளுவ மாலை. உள்ளதை உள்ளபடி ஏற்பதே அறிவுடைமை. மாறாதிருக்கும் அழிவற்ற பொருளே கடவுள். குருபிரான் சுட்டிக்காட்டும் மெய்ப்பொருளே நாவினால் சுட்ட வடு.

**குருபிரான் அருளமுதம்:**

எழு சீர் கொண்ட அமானித ரகசியமே திருக்கொரல். அறம் பொருள் இன்பம் அறிந்தால் வீடு பேறு அடையலாம்.

*ஜீவசகோதரி முத்துலட்சுமி சீனிவாசன்:*

மெய்ஞ்ஞானம் அறியாத பொய்க் குருமாரிடம் பலன் தேடுவது யாவும் விரயமே. வேதத்தை செயல் வடிவாக அவரவரிடம் ஆக்கி வைப்பவரே மெய்யான குருபிரான்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:*

குருபிரான் அருளும் அறிவைப் பெற்று வாழ்வதே தெளிவான மகிழ்ச்சியான வாழ்வு. அவர்களின் சொல் கேட்டு அதன்படி செயலாற்றுவதே ஞானத்தின் சுருக்கமான வழி.

**குருபிரான் அருளமுதம்:**

அறிவிருக்கும் தலம் அறியார் ஆவி வீணே போவார். குறையாத பொருள் மிகக் கொள்ளையிட ஆசை, ஆனால் கொள்ளையிட பொருளும் இல்லாது கொடுப்பாரும் இல்லாத இக்காலத்தில் குறையாத குறையற்ற பொருளை அள்ள அள்ளக் குறைவற்று வழங்கும் அட்சய பாத்திரமாகத் திகழ்வதே ஆதி மார்க்க னீதி அவை.

சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது



Copyright © AMNA Trust, Chennai 

## 29-01-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **இறைவனே யறிய வேண்டி யிருப்பதை னமக்கேன் தந்நான்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே உதயமானது.

*ஜீவசகோதரர் சங்கர்:* உயிராகிய இறைவனை மறவாமல் அதன் வழி நடக்கும் குருவே சிவன். வேதத்தை செயலாக அவரவரிடம் நிரூபணை செய்பவரே அம்பலவாணர் என்பதை வினை தீர்ந்த மக்களே அறிவர்.

**குருபிரான் அருளமுதம்:**
வாழும் காலத்தில் அனுபவிப்பதே எண்ணாயிரம் கற்பகாலம் யோகம் இருந்தாலும் சலிக்காத இன்ப நாடு. அறிவை அறிந்தே பழகித் தேறும் மெய் ஞானத்தை அறிய முடியும். இறைவனின் சாயலாக இருக்கும் மனு மற்றும் தேவனின் அடையாளம் அறிந்தவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். அழிவற்ற பஞ்சபூதமும், பஞ்ச பூதியமாக தன்னிடம் இருப்பதை அறிந்த மனுவே, குரு அருளும் உபதேசம் மூலம் மரணமும் அதை விலக்கும் ரகசியமும் அறிந்தவன்.

**திரு மெய்ஞ்ஞான கொரல் - வாக்கியம் எண் 10:**
தலைவன் ஒருவனின் எச்சில் மதிப்புக்காக பலரும் யுத்தத்தில் மரிப்பது தேச பக்தி அல்லாத தற்கொலையே ஆகும். அரசுகளுக்கு இடையே நடைபெறும் சண்டை பிச்சைக் காரர்களின் சண்டைக்கு ஒப்பான வயிற்றுப் பாட்டுச் சண்டையே ஆகும்.

**குருபிரான் அருளமுதம்:**
சமரசம் என்பது உயிர் ஒட்டிய ரகசியம் என்பதை மெய் அறிந்த மக்கள் அறிவரே அன்றி மற்றவர்களிடம் பேதமும் சண்டையும் வருவது நிச்சயமே. சுவிசேஷ நற்செய்தி அருளும், அருள் நா வேந்தரே பறையர். உன்னத ஒழுக்கம் உள்ளவருக்கே எமபயம் கடந்த மெய்ஞ்ஞானம் வாய்க்கும். ஒரு கோடி நூலுக்கும் பொருளாக இருக்கும் ஆசானின் நாதம் மூலமே இயற்கை உண்மை கடவுளை அறிய முடியும். அணுக் கோடியிலும் நிறைந்த பரம அணுவாம் ஆதியனை அறிந்திடும் வழியே மெய்வழி. ஞானம் அடையத் தடையாக இருக்கும் மனதை அறிவாக மாற்றுவதே தக்குவா எனும் பேரறிவு. பான தீர்த்தம் எனும் மெய்ப் பாலின் மூலமே பிரபஞ்ச ஆற்றலாகிய மெய்யை அறிய முடியும். பிறப்பறுக்கும் பிஞ்சகனாம் குருவினிடம் சரணாகதி அடைந்தோரே பிறவாமை பெறுவர்.

சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 31-01-2026 ~ சனிக்கிழமை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **துலங்ங இங்ங எவர்க்குமெட்டா னிலைக ளெல்லாம்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
மும்மூலம் உண்டாக்கும் அறியாமையே இரு வினைக்கும் பிறப்பு இறப்பிற்கும் காரணம். நன்மையோ தீமையோ விதைப்பதையே நாம் அறுவடை செய்ய வேண்டும். பரிசுத்த ஆவித்



Copyright © AMNA Trust, Chennai 

தெய்வத்தின் திருநாமத்தை ஓங்கி உரத்த கொரலில் அறிக்கை செய்யும் பாக்கியம் பெற்றவனே வினையும் காலக்கிரக தோஷமும் அற்றவன்.

**கோடாயிதக்கூர் வாக்கியம் 229 :**

எழுவகை தோற்றத்தில் ஓரறிவுக்கும் ஐயறிவுக்கும் உள்ள வித்தியாசம் போன்றதே மறுபிறப்பு பெற்ற அமரருக்கும் மனுவுக்கும் உள்ள வித்தியாசமாகும்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:*

மெய் பொய்யின் வித்தியாசம் அறிந்தவரே மனு நரன் தேவனின் லட்சணம் அறிவர்.

**சத்திய வேதம் – ரோமன் அதிகாரம் ; வாக்கியம் - 14,15,16,18,19 :**

*ஜீவ சகோதரர் விஜயகுமார்:*

ஆவிக்குரிய நியாயப் பிரமாணமே சுவிசேஷ நற்செய்தி. ஐயறிவுக்கும் கீழான நிலையில் உள்ள நரனே மனு ஆவதற்கான வித்து. தன் ஜீவனை அறிய ஆசை கொண்டவனே கர்த்தராகிய குருவின் தயவால் மனுவாகி படைத்தவனை வணங்கி இன்பம் பெறுகிறான். சொர்க்க நரகம் பாவ புண்ணியம் இவற்றின் காரணமான மனதை வெல்பவனே உலகில் மிகுந்த பலசாலி. வாங்கி வந்த அமானிதக் கடனை மறந்த மனுவே பிறவிச் சுழலில் சிக்கி நரனாகிறான். சாவை மீறிய சாமியே புண்ணியத்தின் உருவாக வரும் குருவாகிய கர்த்தர்.

*ஜீவசகோதரி மணிமொழி:*

ஆசான் அருளால் ஆறாம் அறிவை அறிந்து அறியாமை விலகும் போதே நகலை விட்டு கடத்துள் இருக்கும் அசலான கடவுளை வணங்க முடியும்.

*ஜீவசகோதரி லாவண்யா:*

தான் வாங்கி வந்த அமானிதக் கடனை திரும்ப செலுத்துவதே மனுவின் தலையாய கடமை. ஆறறிவு பெற்றும் ஐயறிவு நுகர்ச்சியில் வாழ்பவன் குரு அருள் கொண்டே பிறவிக் கடல் நீந்த முடியும்.

*ஜீவசகோதரர் ஜெகன்:*

குருவின் அருளால் ஜீவாத்மா பரமாத்மாவுடன் சேர்ந்து ஒன்றாவதே திருமணம். ஆணாகிய குருவின் அருளால் பெண்ணாகிய சீடன் பரமாத்மா நிலை அடையும் போதே ஆணாகிறான்.

*ஜீவசகோதரி விஜயலட்சுமி:*

நம்மை இயக்கும் கையே இயற்கை உண்மைக் கடவுள். குருவருளால் மனம் அகமுகமாக திரும்பும் போதே உடல் பொய் உயிர் மெய் என அறிய முடியும். வேதத்தை பழகியே பரமபதம் அடைய முடியும்.

*ஜீவசகோதரர் சங்கர்:*

சூரியனின் தென்திசை வடதிசை பயணம் உணர்த்துவது, இறைவனை நோக்கிய மனதின் அகமுக பயணமாகும். மனதின் ஞான அஞ்ஞான நிலை உணர்த்துவதே உத்தராயண தட்சிணாயணம். காலம் கடந்தவர்க்கு காலன் இல்லை. அறிவை அறிந்த மக்களுக்கு எத்திசையும் மேல் திசையே. இறை சன்னதம் பெற்ற துளப வேந்தரே உயிரின் ரகசியம் கூற முடியும். ஆறாம் அறிவை அறிய வைக்கும் ஒரு மெய்க் குருவைத் தேடி அடைவதே மனுவின் கட்டாயக் கடமை. வலம்புரிச் சங்கின் நாதமாக வரும் வள்ளலின் வாய்மையால் தன்னை அறிவதே ஜென்ம சாபல்யம் பெறும் வழி.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

### 18-01-2026 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **வான வேதாந்த சஞ்ஜீவி...** என்ற பாடலுடன் அவை உதயமானது. **மெய்ஞ்ஞானப் பகுப்பு** பாடலின் பொருள் பற்றி குருபிரான் அருளியதும் தொடர்ந்து ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

### 25-01-2026 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **ஓங்நாரத் தொனியான கபாலத்தே...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது. தொடர்ந்து **மெய்ஞ்ஞானப் பகுப்பு** பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!



Copyright © AMNA Trust, Chennai 

## 2026 - ஜனவரி மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 04-01-2026 ~ ஞாயிற்றுக்கிழமை

குருபிரான் திரு சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்பாக புது வருடப் பிறப்பு நிகழ்வு சென்னையில் நடைபெற்றது.





## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **01-03-2026 / திண்டிவனம் ஞாயிற்றுக்கிழமை** | குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்பாக சரவண நந்தவன வளாகத்தில் அமைந்துள்ள பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆலய திறப்பு விழா சீர் சிறப்புடன் நடைபெற உள்ளது. |
| **06-03-2026 / சென்னை வெள்ளிக்கிழமை** | குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்னிலையில் அவையின் அங்கத்தினர் மஞ்சுளா - சேகர் அவர்களின் மூத்த குமாரன் **S.சுபாஷ் - K.அக்க்ஷயா** இவர்களின் திருமணம் சென்னையில் நடைபெற உள்ளது |



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2026 ஜனவரி மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 40**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 55 – Month: February 2026*



Copyright © AMNA Trust, Chennai 